www.tamilarangam.net

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது



**யாழ்** கோட்டை முற்றுகையை உடைக்க மண்டைதீவில் இருந்து முன்னேறிய படையினரில் ஒரு பகுதியினர் புலிகளின் தாக்குதல் காரணமாக கோட்டைக்குள் புகுந்துகொண்டனர்.

முற்றுகையை உடைக்க நினைத்து தாமே முற்றுகைக்குள் சிக்கிக் கொண்டனர் அவர்கள்.

மூன்று மாதங்களாக நீடித்த முற்றுகையை எப்படியாவது முடிவுக்குக் கொண்டுவந்தேயாக வேண்டும். என்ன செய்யலாம்? ஏது செய்யலாம்? என்று படைத்தரப்பு யோசனையில் மூழ்கிக் கிடந்தது.

விமானத் தாக்குதல்களையே படையினர் மலையாக நம்பியிருந்தனர். ஆனால் விமானத் தாக்குதல்கள் மத்தியிலும் புலிகள் முற்றுகையைத் தொடர்ந்தனர்.

அதன் பின்னர்தான் இரசாயனக் குண்டுகளுடன் அவ்ரோ விமானம் யாழ் நகர் நோக்கி அனுப்பிவைக்கப்பட்டது.

25ற்கு மேற்பட்ட குண்டுகளை அவ்ரோ யாழ் நகரில் வீசியது. புலிகளின் காவலரண் என்று கருதப்படும் பகுதிகளை இலக்கு வைத்து குண்டு போட்டது. குண்டுகள் நகரில் கட்டடங்களை நாசமாக்கினவே தவிர, புலிகளின் பதுங்கு நிலைகளைத் தகர்க்க முடியவில்லை.

விமானத் தாக்குதல்களிலும், மண்டைதீவில் இருந்து முன்னேறிய படையினரது தாக்குதல்களிலும் பல நூற்றுக்கணக்கான புலிகள் பலியாகி விட்டதாக இலங்கை அரசு கூறிக் கொண்டிருந்தது.

கோட்டை முற்றுகையை புலிகள் ஆரம்பித்த பின்னர் புலிகள் தரப்பில் கொல்லப்பட்டதாக அரசு வெளியிட்ட எண்ணிக்கைகளைக் கூட்டிப் பார்த்தால் ஒட்டுமொத்தமாகப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் தாண்டிவிடும்.

### நினைவு நாள்

திலீபனின் நினைவு நாள் நெருங்கி வருகிறது. அதனை முன்னிட்டு யாழ் கோட்டை முகாம்மீது இறுதித் தாக்குதல் ஒன்றை, உக்கிரமாகத் தொடுக்கப் போகிறார்கள் புலிகள், என்ற தகவல் அரசின் புலனாய்வுப் பிரிவினருக்கு எட்டியது. அது அரசுக்கு போனது.

அவ்வாறு மூர்க்கமான தாக்குதல் நடத்தப்பட்டால் தாக்குப்பிடிக்க முடியுமா? இல்லையா? என்று யோசித்தனர்.

வான் மார்க்கமாகவோ, தரை மார்க்கமாகவோ விநியோகம் நடத்த முடியாத நிலையில் இருக்கிறது யாழ் கோட்டை முகாம்.

இவ்வாறான ஒரு முகாமைத் தொடர்ந்து தக்க வைப்பது இராணுவ ரீதியில் சாத்தியமானதல்ல எனவும் படை அதிகாரிகள் நினைத்தனர்.

"எப்படியிருந்தபோதும் யாழ் கோட்டையை கைவிடோம். புலிகளின் முற்றுகையை முறியடித்து அவர்களை விரட்டியடிப்போம்!" என்று அரசாங்கம் சூளுரைத்துக் கொண்டிருந்தது.

அதனால், யாழ் கோட்டையை மேலும் சில மாதங்களுக்காயினும் வைத்திருந்து விட்டு பின்னர் கைவிடலாம் என்பதே அரசாங்கத்தின் திட்டம்.

இல்லையெனில் எதிர்க்கட்சிகள் கிண்டல் செய்யும். போரில் தோல்வி கண்டு விட்டதாக பிரசாரம் செய்யும்.

ஆகவே முடியுமானவரை புலிகளின் முற்றுகையை உடைத்து அவர்களை விரட்ட நடவடிக்கை எடுக்குமாறு களத் தளபதிகளுக்கு அரசாங்கம் உத்தரவிட்டது.

படையினரால் கைப்பற்றப்பட்ட மண்டைதீவு கடற்கரையோரப் பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர்மீது தினமும் இரவில் புலிகள் தாக்குதல் நடத்தியவண்ணம் இருந்தனர்.

கடற்பகுதியில் வைத்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

யாழ் கோட்டை முற்றுகையைத் தகர்ப்பதுடன், யாழ் நகரையும் படையினர் கைப்பற்றி விடுவார்கள் என்று அரசாங்க பிரசார சாதனங்கள் கூறிக் கொண்டிருந்தன.

இதற்கிடையே போர்க்களச் செய்திகளை அரசாங்கம் எப்படியெல்லாம் திரிபுபடுத்தியது என்பதற்கு ஓர் உதாரணமாக அறிவிப்பு ஒன்று வெளியானது.

"யாழ் கோட்டை முற்றுகை முறியடிக்கப்பட்டது. மறுபடி கோட்டைப் பகுதி அரச துருப்புக்களிடம் வந்துவிட்டது!" என்று கூறியது அந்த அறிவிப்பு.

மண்டைதீவில் இருந்து கடற்பாதை ஊடாக நகர்ந்த படையினர் புலிகளுடனான சண்டையில் யாழ் கோட்டைக்குள் பின் வாங்கினார்கள்.

அதனைத்தான் யாழ் கோட்டை கைப்பற்றப்பட்டது என்று அறிவித்தது அரசாங்கம்.

### இறுதித் தாக்குதல்

கோட்டை மதில்மேல் காவலுக்கு நிற்கும் படையினரை நோக்கியும் புலிகள் தாக்கினார்கள்.

திலீபனின் நினைவு நாளை நெருங்கிக் கொண்டிருந்தபோது புலிகளின் அணிகள் இடையேயும் எப்படியாவது கோட்டையை பிடித்தே தீருவது என்னும் உத்வேகம் ஏற்பட்டிருந்தது.

# 105 நாள் முற்றுகை


கோட்டையில் புலிக்கொடி


திலீபன்

கோட்டை மதிலில் புலிகள் தாவி ஏற முற்பட்டனர். அவர்களில் சிலர் மதில் மேல் காவலுக்கிருந்த படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

அவர்களது சடலங்களை புலிகளால் மீட்க முடியவில்லை. அப்படியே கிடந்தன.

"1990 செப்டம்பர் 26ம் திகதி திலீபனின் நினைவு தினம். அத் தினத்தில் யாழ் கோட்டை எமது கையில் இருக்க வேண்டும். அங்கு புலிக்கொடி ஏற்ற வேண்டும்!" என்று தீர்மானித்தனர் புலிகள்.

அதே நேரம் படையினரும் புலிகளின் பாரிய தாக்குதலை எதிர்கொள்ளும் வழிவகைகள் பற்றி முடிவு செய்திருந்தனர்.

எதிர்த்து நிற்க முடியாவிட்டால் யாழ் கோட்டையைக் கைவிட்டு மண்டைதீவை நோக்கிப் பின்வாங்குவது என்று முடிவு செய்திருந்தனர்.

கோட்டையை கைவிட நேர்ந்தால், எவ்வாறு பின்வாங்குவது, ஆயுத தளபாடங்களை எப்படி கொண்டு செல்வது என்பது பற்றியும் முடிவு செய்யப்பட்டது.

மண்டைதீவை நோக்கியிருந்த கடற்கரையோரமாக சீமெந்திடப்பட்டு மூடி வைக்கப்பட்டிருந்த பின் கதவு அகற்றப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டது. இப்பாதை முன்னர் கழிவு அகற்றப் பயன்பட்டது.

செப்டம்பர் 25ம் திகதி யாழ் மாவட்ட தளபதி பானு தலைமையில் இறுதித் தாக்குதல் ஆரம்பமானது.

நள்ளிரவு 12 மணியளவில் புலிகளின் சொந்தத் தயாரிப்பான பாரிய மோட்டார் ஷெல்கள் கோட்டை முகாமை நோக்கி சரமாரியாக ஏவப்பட்டன.

பாரிய சத்தத்துடன் கோட்டையின் கொத்தளங்கள் சரிந்துவிழும் விதமாக ஷெல்கள் உள்ளே விழுந்து வெடித்தன.

எதிர்பார்த்தது சரிதான். புலிகள் தாக்குதலை உக்கிரமாகத் தொடுத்து விட்டனர் என்பது உள்ளிருந்த படையினருக்கு தெரிந்துவிட்டது.

யாழ் கோட்டையைத் தக்கவைக்க முயன்று தோற்றால், உள்ளே இருக்கும் படைகள் அழிய நேரலாம்.

அப்படி நிகழ்ந்தால் தென்னிலங்கையில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி வரும். முகம் கொடுக்க அரசால் முடியாது.

ஆகவே, உத்தரவு பறந்தது. "யாழ் கோட்டைக்குள் இருக்கும் துருப்புக்களை மீட்டெடுப்பதுதான் முக்கியம்!"

கோட்டைக்குள் இருந்த படையினருக்கும் உத்தரவு சென்றது: "ஆயுத தள பாடங்களுடன் கோட்டையைவிட்டு வெளியேறுங்கள்!"

அக் கட்டத்தில் வங்கியும் யாழ் கோட்டைக்குள்தான் இருந்தது. அங்கு பணமும், நகைகளும் இருந்தன.

### வெளியேற்றம்

கோட்டையின் உள்ளே புலிகளின் ஷெல்கள் விழுந்து வெடித் துக் கொண்டிருக்கையில் கோட்டையின் பின்புற வாயிலை உடைத்தபடி படையினர் வெளியேற ஆரம்பித்தனர்.

கோட்டையைவிட்டு பின்புற வழியாகவே படையினர் தப்பிச் செல்லுவர் என்பதை புலிகள் முன் கூட்டியே ஊகித்திருந்தனர்.

அதற்கேற்ப பின்புறமாக தப்பிச்செல்லும் படையினரைத் தாக்கி அழிக்க அணிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

யாழ் கோட்டைக்குள் இருந்து பாரிய ஆயுத தளபாடங்களுடன் வெளியேறிய படையினரின் சுடுபலம் அதிகமாக இருந்தது.

அதுதவிர, மண்டைதீவில் இருந்து படகுகள் மூலம் வந்த கடற்படையினரும் இராணுவத்தினருக்கு உதவினர்.

# வீழ்ந்தது யாழ் கோட்டை


யாழ் கோட்டையின் உட்பகுதி

படகுகள், மற்றும் காற்றடைத்த ரப்பர் படகுகள் போன்றவற்றின் உதவியுடன் மட்டுமன்றி, கையால் துடுப்பு வலித்தபடியும் படையினர் மண்டைதீவுக்கு அருகிலுள்ள சிறுத்தீவு நோக்கிச் சென்றனர்.

கோட்டை மதில் அருகே ஏணிகளை வைத்து ஏறிய புலிகள் கோட்டையின் உட்புறத்தில் குதித்தனர். இதனையடுத்து கோட்டையின் உட்புறத்தில் படையினரும் புலிகளும் மோதினர்.

யாழ் கோட்டையைக் கைவிட்டுச் செல்லும் படையினர் ஆயுத தளபாடங்களை கொண்டு செல்லாமல் தடுப்பதற்காகவே வெளியேறிய படையினரை நோக்கி புலிகள் தொடர்ந்து தாக்கினார்கள்.

ஆனால் புலிகளின் தடுப்பு முயற்சியை முறியடித்து பெரும் தொகையான ஆயுத தளபாடங்களுடன் மண்டைதீவுக்கு அருகிலுள்ள சிறுத்தீவுக்கு படையினர் சென்றடைந்தனர்.

செப்டம்பர் 26ம் திகதி அதிகாலை 3.30 அளவில் யாழ் கோட்டை முற்றாக புலிகளின் கையில் வீழ்ந்தது.

சிறுத்தீவு நோக்கிச் சென்ற படையினரை நோக்கியும் புலிகள் தாக்கத் தொடங்கினார்கள். ஷெல்களும் ஏவப்பட்டன.

அதனால் சிறுத்தீவில் இருந்து மண்டைதீவை சென்றடைந்தனர் படையினர்.

சரியாக 105 நாட்கள் நடைபெற்ற முற்றுகையுத்தத்தின் பின்னர் கோட்டையைக் கைப்பற்றினர் புலிகள்.

இறுதி நாள் மோதலில் புலிகள் தரப்பில் பெண் புலியான இரண்டாம் லெப்டினன்ட் சிசிலியா (யூஜீனா பகீரதகுமார்- மன்னார்) லெப்டினன்ட் நகுலன் (இராசதுரை நேசன்- வதிரி) ரகு (றொபோர்ட் சாந்தகுமார்- கட்டுடை) ஆகியோர் பலியாகினர்.

யாழ் கோட்டைக்குள் இருந்த முக்கிய ஆயுத தளபாடங்களை படையினர் எடுத்துச் சென்றனர்.

ஆர்.பி.ஜிக்கள், ரி.56 ரக துப்பாக்கிகள், எல்.எம்.ஜிக்கள், பெரும் தொகையான ரவைகள் என்பவை புலிகளால் கோட்டைக்குள் இருந்து கைப்பற்றப்பட்டன.

கோட்டை முற்றுகைக் காலத்தில் கோட்டை மதிலில் ஏறி பலியான புலிகளின் எலும்புக்கூடுகளும், சீருடைகளும் மதிலோரங்களிலிருந்து புலிகளால் மீட்கப்பட்டன.

### கொடி

1987 செப்டம்பர் 26ம் திகதி காலை 10.48க்கு திலீபனின் உயிர் பிரிந்தது.

1990 செப்டம்பர் 26ம் திகதி காலை 10.48 க்கு யாழ் கோட்டையில் புலிகளின் யாழ் மாவட்ட தளபதி பானு புலிக் கொடியை ஏற்றிவைத்தார்.

யாழ் கோட்டையைக் கைவிட்ட பின்னர் அதற்கு அரசாங்கமும், படைத்தரப்பும் பல காரணங்கள் கூறின.

"கோட்டைக்குள் பெருந்தொகையான பணமும், நகைகளும் இருந்தன. அவற்றைக் கைப்பற்றவே புலிகள் திட்டமிட்டிருந்தனர். நாம் அவற்றைக் காப்பாற்றிவிட்டோம்!" என்றனர்.

கோட்டை வங்கியில் பணமும், நகைகளும்இருந்தன என்றாலும், அதனை குறிவைத்து பாரியதாக்குதல் நடத்துமளவுக்கு பெரும் தொகையாக இருக்கவில்லை.

"யாழ் கோட்டை இராணுவரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று முன்னரே முடிவு செய்திருந்தோம்!" விரைவில் யாழ் நகரைப் பிடிப்போம் என்றும் கூறப்பட்டது.

யாழ் கோட்டையை கைப்பற்றிய புலிகள் பின்னர் அதனை படிப்படியாக தரைமட்டமாக்கினர்.

அவ்வாறில்லாமல் இன்று யாழ் கோட்டை இருந்திருக்குமானால், யாழில் உள்ள படையினருக்கு பலமான தளமாக விளங்கியிருக்கும்.

யாழ் கோட்டையை இழந்தது அப்போதைய நிலையிலும், நீண்டகால நோக்கிலும் அரசுக்கு ஏற்பட்ட பாரிய இழப்புத்தான். எனினும் தோல்வியை ஒப்புக்கொள்ள அரசாங்கம் முன்வரவில்லை.

இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான போரில் முதலாவது நீண்ட முற்றுகை யுத்தம் யாழ் கோட்டை யுத்தமாகும்.

யாழ் கோட்டை வீழ்ந்ததை முன்னிட்டு புலிகளின் தலைமைச் செயலகம் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

"300 வருடகாலங்களுக்கும் மேலாக தமிழீழ மக்களை ஆக்கிரமித்து நின்ற ஆக்கிரமிப்புச் சின்னங்களில் ஒன்றான யாழ் கோட்டை இன்று அதிகாலை எம்மால் கைப்பற்றப்பட்டது.

என்ன விலை கொடுத்தும்இதனைக் கைப்பற்றுவோம் என்ற எமது உறுதிமொழியை நிறைவேற்றிவிட்டோம்!" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

### அரசின் அறிக்கை

அன்றைய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டார்.

"யாழ் கோட்டையை உங்களிடம் ஒப்படைக்கிறோம். யாழ் பொது மருத்துவமனை இயங்க ஏற்பாடு செய்யுங்கள்!" என்று கேட்டுக் கொண்டார்.

'விழுந்தும் மீசையில் மண்படவில்லை' என்ற கதைக்கு ஒப்பானதே ரஞ்சனின் அறிவிப்பாகும்.

அரசாங்கம் என்னதான் சமாதானம் கூறியபோதும், எதிர்க்கட்சிகள், "அரசு தோல்வி கண்டுவிட்டது. கோட்டையை புலிகளிடம் இழந்துவிட்டது!" என்றே பிரசாரத்தை முடுக்கிவிட்டன.

யாழ் கோட்டையைக் கைப்பற்றிய உற்சாகத்தோடு அடுத்த கட்டத் தாக்குதல்களுக்கு புலிகளின் அணிகள் தயாராகின.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்